Dhinathdhalam@gmail.com

www.dhinathdhalam.com

# தினத்தளம்

PRGI NO: TNBIL/25/A3556 நடுநிலை நாளிதழ் ISO : 9001:2015; QT-57977/1125

நிர்வாக ஆசிரியர் : முனைவர். எஸ்.மோகன்ராஜ் M.A.,PGDJMC.,Ph.D., DHINATH DHALAM Tamil & English daily Paper ஆசிரியர் : முனைவர். எம்.ஹரிகிருஷ்ணன் B.A.,

மலர் Volume : 01 | இதழ் Issue : 81 | வியாழக்கிழமை Thursday | 22.01.2026 | பக்கங்கள் Pages:4 | ₹ 6 | ஈரோடு Erode

**விளம்பரதாரர்கள் தேவை**

தமிழகம் முழுவதும் 234
சட்டமன்ற தொகுதிகளுக்கும்
செய்தி – விளம்பரம்
சேகரிக்க முழு நேர – பகுதி நேர
பணிக்கு தகுந்த ஆட்கள் தேவை.

☎ 9 111 222 654

**செய்தியாளர்கள் தேவை**

தமிழகம் முழுவதும்
மாவட்டம் & தாலுகா
வாரியாக சந்தாதாரர்
அடிப்படையில்
ஆண்/பெண்
நிருபர்கள் தேவை

☎ 94440 82959

# 90 மீனவர்கள், 254 படகுகளை உடனடியாக விடுவிக்க நடவடிக்கை

## மத்திய அமைச்சர் ஜெய்சங்கருக்கு முதலமைச்சர் ஸ்டாலின் கடிதம்







சென்னை:

தமிழ்நாட்டு மீனவர்கள் இலங்கை கடற்படையினரால் சிறைபிடிக்கப்படுவதை தடுத்திடவும், சிறைபிடிக்கப்பட்ட மீனவர்களையும், அவர்களது மீன்பிடிப் படகுகளையும் உடனடியாக விடுவித்திடவும் உரிய தூதரக நடவடிக்கைகளை மேற்கொள்ள வலியுறுத்தி மத்திய அமைச்சர் எஸ். ஜெய்சங்கருக்கு, முதல்வர் மு.க.ஸ்டாலின் கடிதம் எழுதியுள்ளார்.

இது குறித்து அவர், வெளியுறவுத் துறை அமைச்சர் எஸ். ஜெய்சங்கருக்கு எழுதியுள்ள கடிதத்தில், மயிலாடுதுறை மாவட்டத்தைச் சேர்ந்த 7 மீனவர்கள், இரண்டு மீன்பிடிப்படகுகளில் வழக்கமான மீன்பிடி நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்தபோது, இலங்கைக்கடற்படையினரால் இன்று சிறைபிடிக்கப்பட்டுள்ளனர்.

தமிழ்நாட்டைச்சேர்ந்த மீனவர்கள் மீண்டும் மீண்டும் இதுபோன்று கைது செய்யப்படுவதும், அவர்களின் மீன்பிடிப் படகுகள் இலங்கைஅதிகாரிகளால் பறிமுதல் செய்யப்படுவதும் தடையின்றி தொடர்வது மிகுந்த கவலைக்குரியதாக உள்ளது . இன்றுவரை தமிழ்நாட்டைச் சேர்ந்த மொத்தம் 254 மீன்பிடிப் படகுகளும், தற்போதைய சம்பவத்தில் கைது செய்யப்பட்டவர்கள் உட்பட 90 மீனவர்களும் இலங்கை காவலில் உள்ளனர்.

தொடர்ச்சியாக நிகழும் இத்தகைய கைது நடவடிக்கைகள் தமிழ்நாட்டின் கடலோர மீனவ சமூகத்தினருக்குக் கடுமையான இன்னல்களை ஏற்படுத்தியுள்ளது.தமிழக மீனவர்கள் இலங்கையில் நீண்ட காலம் தடுப்புக்காவலில்வைக்கப்படுவதும், அவர்களின் படகுகள் பறிமுதல் செய்யப்படுவதும், அவர்களது குடும்பத்தினருக்கு கடுமையான பொருளாதார நெருக்கடியினையும் தொடர்ச்சியான மன உளைச்சலையும் பதற்றத்தையும் ஏற்படுத்தியுள்ளது.

இத்தகைய சம்பவங்கள், கடலோரப் பகுதிகளின் சமூக மற்றும் பொருளாதாரக் கட்டமைப்பை ஆழமாகச் சீர்குலைத்துள்ளது.

எனவே, கைது செய்யப்பட்டுள்ள அனைத்து மீனவர்களையும்,அவர்களது மீன்பிடிப் படகுகளையும் இலங்கை அரசு உடனடியாக விடுவித்திடவும், இதுபோன்ற கைது நடவடிக்கைகள் தொடர்ந்து நடைபெறுவதைத் தடுக்கவும், ஒன்றிய அரசு உரிய தூதரக நடவடிக்கைகளை விரைந்து மேற்கொள்ள வேண்டும்"

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

# “என்டிஏ கூட்டணியில் இணைந்துள்ள டிடிவி தினகரனை வரவேற்கிறேன்”

## அ.தி.மு.க. பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி பேச்சு





சென்னை:

"தேசிய ஜனநாயக கூட்டணியில் இணைந்துள்ள மரியாதைக்குரிய டிடிவி தினகரனை வரவேற்கிறேன்" என அதிமுக பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி தெரிவித்துள்ளார்.

தமிழகத்தில் சட்டப்பேரவைத் தேர்தல் நெருங்கும் நிலையில், டிடிவி தினகரனின் அமமுக கட்சி மீண்டும் தேசிய ஜனநாயக கூட்டணியில் இணைந்துள்ளது.

தமிழகத்தில் சட்டப்பேரவைத் தேர்தல் நெருங்கும் நிலையில், டிடிவி தினகரனின் அமமுக கட்சி மீண்டும் தேசிய ஜனநாயக கூட்டணியில் இணைந்துள்ளது. அதிமுக பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி இல்லாமலேயே, டிடிவி தினகரன் – மத்திய அமைச்சர் பியூஷ் கோயல் இடையே சந்திப்பு நடைபெற்றது கவனம் பெற்றுள்ளது.

தமிழக சட்டப்பேரவைத் தேர்தல் இந்த ஆண்டு நடைபெறஇருக்கிறது. இந்த நிலையில், டிடிவி தினகரனின் அமமுககட்சி தேசிய ஜனநாயக கூட்டணியில் இணைந்துள்ளது.திமுக கூட்டணியில் காங்கிரஸ், மதிமுக, கம்யூனிஸ்ட் கட்சிகள், விடுதலை சிறுத்தைகள் உள்ளிட்ட பல கட்சிகள் உள்ளன.

அதிமுக தலைமையிலான கூட்டணியில் தற்போது வரை பாஜக, பாமக, தமாகா, புதிய நீதிக்கட்சி உள்ளிட்ட கட்சிகள் இடம்பெற்றுள்ளன. இந்நிலையில் இந்தக் கூட்டணியில் இப்போது டிடிவி தினகரன் இணைந்துள்ளார். எடப்பாடிபழனிசாமியை முதல்வர் வேட்பாளராக ஏற்கவே முடியாது. பழனிசாமி இருக்கும் கட்சியில்கூட்டணியில்இருப்பதற்குப் பதில் தூக்கில் தொங்கிவிடலாம் என தே.ஜ கூட்டணியில் இருந்து வெளியேறிய டிடிவி தினகரன், கடும் விமர்சனங்களை முன்வைத்ததை மறந்திருக்க முடியாது.

தற்போது, அதிமுக இடம்பெற்றுள்ள தேசிய ஜனநாயக கூட்டணியில் அமமுக இணைந்துள்ளது.சென்னையில் அமமுக மாவட்டச் செயலாளர்கள் கூட்டத்துக்குப் பின்னர் டிடிவி தினகரன் இதனை அறிவித்தார்.

தொடர்ந்து சென்னையில் உள்ள நட்சத்திர விடுதியில் பாஜக தேர்தல் பொறுப்பாளர் பியூஷ் கோயலுடன் டிடிவி தினகரன் சந்திப்பு நடத்தினார்.

அப்போது மத்திய அமைச்சர் எல்,முருகன், பாஜக மூத்த தலைவர் வானதி சீனிவாசன் ஆகியோர் உடன் இருந்தனர்.

இந்நிலையில், இது குறித்துஎடப்பாடிபழனிசாமி தனது எக்ஸ் தளத்தில், "தீயசக்தி திமுக-வின் கொடுங்கோல் ஆட்சியை வேரடி மண்ணோடு வீழ்த்திடவும், வாரிசு அரசியலுக்கு முற்றுப் புள்ளியை வைத்திடவும், ஜெயலலிதாவின் பொற்கால ஆட்சியை மீண்டும் தமிழகத்தில் அமைத்திட வேண்டும்.

இந்நிலையில், தேசிய ஜனநாயகக் கூட்டணியில் இன்றைய தினம் இணைந்துள்ள அம்மா மக்கள் முன்னேற்றக் கழகத்தின் பொதுச்செயலாளர் மரியாதைக்குரிய டிடிவி. தினகரனை அன்போடு வரவேற்று, அவருக்கு எனது மனமார்ந்த வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மக்கள் நலன் ஒன்றே குறிக்கோளாகக் கொண்டு, நாம் அனைவரும் ஒன்றாக இணைந்து, திமுக குடும்ப ஆட்சியின் பிடியில் இருந்து மக்களைக் காப்போம், தமிழகத்தை மீட்போம்" எனத் தெரிவித்துள்ளார்.

எடப்பாடி பழனிசாமியை முதல்வர் வேட்பாளராக ஏற்கவே முடியாது. பழனிசாமி இருக்கும் கட்சியில் கூட்டணியில் இருப்பதற்குப் பதில் தூக்கில் தொங்கிவிடலாம் என தே.ஜ கூட்டணியில் இருந்து வெளியேறிய டிடிவி தினகரன், கடும் விமர்சனங்களை முன்வைத்ததை மறந்திருக்க முடியாது.

இந்நிலையில்,"மக்கள் விரும்பும் நல்லாட்சியை தமிழ்நாட்டில்உருவாக்க தேசிய ஜனநாயககூட்டணியில் இணைகிறோம்" என்று டிடிவியும்; "மரியாதைக்குரிய டிடிவியை வரவேற்கிறேன்" என்று எடப்பாடி பழனிசாமியும் தெரிவித்துள்ளனர்.

# விஜய் தலைமையில் தவெக செயல் வீரர்கள் கூட்டம்!



தமிழக வெற்றிக் கழகத்தின் தலைவர் விஜய் தலைமையில் வருகின்ற ஜன. 25 ஆம் தேதி செயல் வீரர்கள் கூட்டம் நடைபெறவுள்ளது.

கடந்த டிசம்பர் மாதத்தில் கிறிஸ்துமஸ் கொண்டாட்டத்தில் கலந்துகொண்ட பிறகு, மீண்டும் கட்சி நிகழ்வில் விஜய் உரையாற்றவுள்ளதால் எதிர்பார்ப்பு எழுந்துள்ளது.

ஒரு மாதமாக ஜன நாயகன் திரைப்படத்துக்கான தணிக்கைச் சான்று விவகாரம், கரூர் நெரிசல் பலி வழக்கில் சிபிஐ விசாரணை என அடுத்தடுத்து பல்வேறு சிக்கல்களை விஜய் சந்தித்து வருகிறார். இன்னும் ஓரிரு மாதங்களில் தமிழக சட்டப்பேரவை தேர்தலுக்கான அறிவிப்புகள் வெளியாகவிருக்கும் நிலையில், தவெகவின் செயல் வீரர்கள் கூட்டம் முக்கியத்துவம் வாய்ந்ததாக பார்க்கப்படுகிறது.தேர்தல் கூட்டணி, தேர்தல் பிரசாரம் உள்ளிட்ட பல்வேறு முக்கிய தலைப்புகளின் கீழ் தவெக நிர்வாகிகளுடன் விஜய் ஆலோசனை நடத்தவுள்ளார். , ஜன நாயகன் தணிக்கை விவகாரம், சிபிஐ விசாரணை குறித்து எவ்வித கருத்தும் இதுவரை விஜய் தெரிவிக்காத நிலையில், செயல்வீரர்களின் கூட்டத்தில் இதுகுறித்து பேசுவாரா என்ற எதிர்பார்ப்பு எழுந்துள்ளது.

# தங்கம் விலை ஒரே நாளில் பவுனுக்கு ரூ. 4,120 உயர்வு; வெள்ளி கிலோவுக்கு ரூ. 5,000 உயர்வு





சென்னையில் ஆபரணத் தங்கத்தின் விலை ஒரே நாளில் இருமுறை சவரனுக்கு ரூ. 4,120 உயர்ந்துள்ளது. தங்கம் விலை கடந்த மாதம் (டிசம்பர்)15-ந்தேதி ஒருசவரன் ரூ.1 லட்சத்தை தாண்டியது. அதன் பின்னர் விலை குறைந்த நிலையில், அதே மாதம் 22-ந்தேதியில் இருந்து மீண்டும் ஏறுமுகத்தில் பயணித்தது. கடந்த மாதம் 28-ந்தேதி புதிய உச்சத்தை தொட்டு,பிறகுவிறுவிறுவென இறங்கியது. அப்படியாக விலை குறைந்து வந்து, கடந்த ஒருவாரமாகமீண்டும் ஏற்றத்திலேயேதங்கம் விலை இருந்து வருகிறது.

அமெரிக்க டாலருக்கு நிகரான இந்திய ரூபாயின் மதிப்பு சரிவு, சர்வதேச அளவில் தங்கத்தின் மீதான முதலீடு உயர்வு உள்ளிட்ட காரணங்களால் தங்கம் விலை தொடர்ந்து உயர்ந்து புதிய உச்சத்தை தொட்டு வருகிறது.

அந்த வகையில், திங்கள்கிழமை சவரனுக்கு ரூ.1,360 உயர்ந்து ரூ.1 லட்சத்து 7 ஆயிரத்து 600-க்கு விற்பனையானது. தொடர்ந்து செவ்வாய்க்கிழமை காலை தங்கம் விலை கிராமுக்கு ரூ.160 உயர்ந்து ரூ.13,610 – க்கும்,சவரனுக்கு ரூ.1,280 உயர்ந்து ரூ.1 லட்சத்து 8,880-க்கும் விற்பனையானது.

தொடர்ந்து, மாலையில் மீண்டும் கிராமுக்கு ரூ.290 உயர்ந்து ரூ.13,900-க்கும், சவரனுக்குரூ.2,320உயர்ந்து ரூ.1 லட்சத்து 11,200-க்கும் விற்பனையானது. இதன் மூலம் ஒரே நாளில் தங்கம் விலை கிராமுக்கு ரூ. 450, சவரனுக்குரூ.3,600 உயர்ந்தது. இதனிடையே, (ஜன.21) காலைஆபரணத்தங்கத்தின் விலை சவரனுக்கு ரூ. 2,800 அதிகரித்து ரூ.1 லட்சத்து 14,000 – க்கு விற்பனைசெய்யப்பட்டது. வர்த்தகம் நிறைவடைவதற்கு முன்பு பிற்பகலில் கிராமுக்கு ரூ. 515 உயர்ந்து ஒருகிராம் ரூ. 14,415-க்கும் சவரனுக்குரூ.1,320உயர்ந்து ஒரு சவரன் ரூ.1 லட்சத்து 15,320 – க்கும் விற்பனை செய்யப்படுகிறது.

அதேபோல்,வெள்ளி விலையும் கிராமுக்கு ரூ. 5 உயர்ந்து ரூ.345-க்கும், கிலோ கட்டி வெள்ளி ரூ. 5,000 உயர்ந்து ரூ. 3.45 லட்சத்துக்கும் விற்பனையாகிறது.

**செய்திகள்**
உடனுக்குடன் படிக்க
தினத்தளம்
DHINATH DHALAM
வாட்ஸ் அப் குரூப்பில்
இணையுங்கள்

Join my WhatsApp group.
https://chat.whatsapp.com/CgGZM7snNtZ0QMr6or5zVx?mode=wwt

## உலக தமிழ் கலை பண்பாட்டு கலைக்கூடம் சார்பில் சென்னையில் நடைபெற்ற விருது வழங்கும் விழா நிகழ்ச்சியில் கோவையை சேர்ந்த, சமூக சேவகர் சுக்ருல்லா பாபு மற்றும் சிலம்ப கலை ஆசான் முத்துபாண்டிக்கு விருதுகள் வழங்கி பெருமை படுத்தப்பட்டது

உலகத் தமிழ் கலை பண்பாட்டு கலைக்கூடம் சர்வதேச அமைப்பு சார்பாக வருடங்களுக்கு மேலாக, மாணவ மாணவியர்களுக்கு பயிற்சிகள் கொண்டு சிறந்த கலைஞர்களின் சேவையை பாராட்டி வாழ்த்துக்கள்



தமிழர்கள் பாரம்பரிய கலை நிகழ்ச்சி கடந்த ஜனவரி 17ம் தேதி சென்னையில் நடைபெற்றது..

இந்த நிகழ்ச்சியில் கோவையைச் சேர்ந்த தொழிலதிபரும், சமூக சேவகருமான டாக்டர் சுக்குருல்லா பாபுவுக்கு, சமூக நல்லிணக்க நாயகர் எனும் விருது வழங்கி பெருமை படுத்த பட்டது. தொடர்ந்து

சிலம்பம் மற்றும் தற்காப்பு கலையை கடந்த 46 வழங்கி வரும் எம்.எஸ். ஆர்.முத்துபாண்டி ஆசானின் சேவையை பாராட்டி விருதுகள் வழங்கப்பட்டது

இவ்விருதை பழமை பெறும் புகழ்பெற்ற சண்டை பயிற்சியாளரான ஜாகுவார் தங்கம் வழங்க, சிலம்ப கலை ஆசான் முத்துபாண்டி பெற்று கொண்டார். மேலும் இந்த நிகழ்ச்சியில் சின்னத்திரை நட்சத்திரங்கள், நடிகர் நடிகைகள் என பலரும் கலந்து தெரிவித்தனர். இவ்விருதைபெற்றுகோவைக்கு பெருமை சேர்த்துள்ள சமூக சேவகர் சுக்குருல்லா பாபு, மற்றும்சிலம்பகலைஆசான் முத்துபாண்டி கோவை திரும்பினர் அவர்களுக்கு சிறப்பான வரவேற்பு அளிக்க பட்டது. பொதுமக்கள் சார்பாகவும், கராத்தே பயிற்சி மாணவ மாணவியர்கள் சார்பாகவும் இந்த பாராட்டு விழா நிகழ்ச்சி நடைபெற்றது என்பது குறிப்பிடத்தக்கது.



உளுந்தூர்பேட்டை அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளி ஆசிரியர்கள் ராஜவேல், கந்தசாமி ஆகிய இருவரும் கள்ளக்குறிச்சி மாவட்ட அளவிலான திருக்குறள் போட்டியில் வெற்றி பெற்றனர். இந்த நிலையில் மாநில அளவிலான திருக்குறள் போட்டிக்கு தகுதி பெற்ற இவர்கள் இருவரும் திருப்பூரில் நடைபெற்ற மாநில அளவிலான திருக்குறள் போட்டியில் கலந்து கொண்டு வெற்றி பெற்றனர் இதை எடுத்து இவர்கள் இருவருக்கும் பரிசு பாராட்டு சான்று மற்றும் திருவள்ளுவர் சிலை ஆகியவை வழங்கப்பட்டது இவற்றை ஆசிரியர்கள் ராஜவேல் மற்றும் கந்தசாமி ஆகிய இருவரும் உளுந்தூர்பேட்டை அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளியின் தலைமை ஆசிரியை லட்சுமி கார்த்தியாயிணி, உதவி தலைமை ஆசிரியர்கள் பாண்டியன் ரமேஷ் ஆகியோருடன் வழங்கி வாழ்த்து பெற்றனர்.

## கோவை பெரியநாயக்கன்பாளையம் அருகே தனியார் மதுபானக்கூடம் கேட்டின் முன்பு வாலிபர் வெட்டி படுகொலை; வாலிபர் கைது

கோவை மாவட்டம், பெரியநாயக்கன்பாளையம் அருகே உள்ள பிளிச்சி ஊராட்சிக்குட்பட்ட சின்னமத்தம்





பாளையம் பகுதியில் SpartanSportsRecreationClub FL2மதுபானகூடம்உள்ளது. இங்கு நேற்று இரவு ஒன்னிபாளையம், கோகுலம் காலனியைச் சேர்ந்த கேட்டரிங் தொழில் செய்துவரும் 50 வயதான சுரேஷ் என்பவர் மது அருந்திக்கொண்டிருந்துள்ளார். அப்போது அங்கு மது அருந்திக்கொண்டிருந்த திருமலை நாயக்கன் பாளையம், பெருமாள் கோவில் வீதியைச் சேர்ந்த ஆட்டோ டிரைவர் தமிழ்ச்செல்வன் என்பவருக்கும் இடையே மதுபோதையில் வாக்குவாதம் ஏற்பட்டுள்ளது.

இதையடுத்து போதையில் இருந்த சுரேஷ் மதுபான கூடத்திலேயே படுத்துவிட்டார். இரவு 11 மணியளவில் மதுபான கூட ஊழியர்கள் கூடத்தை மூடுவதற்காக உள்ளேஇருந்தசுரேஷை தூக்கிக் கொண்டு வந்து கூடத்தின் முன் இருந்த கேட் முன்பாகவெளியில் படுக்க வைத்துள்ளனர்.

இந்தநிலையில் மதுபான கூடத்தில் ஏற்கனவே வாக்குவாதம் செய்த தமிழ்ச்செல்வன் இரவு 11.45 மணிக்கு அங்கு வந்து தான் வைத்திருந்த அரிவாளால் சுரேஷின் வலது பக்க கழுத்து மற்றும் முகம், தாடை ஆகிய இடங்களில் வெட்டி உள்ளார். இதில் படுகாயமடைந்த சுரேஷ் சம்பவ இடத்திலேயே இரத்த வெள்ளத்தில் துடுதுடித்து இறந்துள்ளார்.

இது குறித்து தகவல் அறிந்த பெரியநாயக்கன்பாளையம் போலீசார் சுரேஷின் உடலை கைப்பற்றி பிரேத பரிசோதனைக்காககோவை அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். இதையடுத்து கொலை செய்த தமிழ்செல்வனைகைதுசெய்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர். மதுபான கூட வாசலில் மதுபோதையில் ஒருவர் அரிவாளால் வெட்டிக்கொலை செய்த சம்பவம் அப்பகுதியில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.



### செங்கல்பட்டு மாவட்டம் பொலம்பாக்கம் அரசினர் மேல்நிலைப் பள்ளியில்

## 29 ஆண்டுகள் கழித்து அரசு பள்ளியில் படித்த முன்னாள் மாணவர்கள் சந்திப்பு

செங்கல்பட்டு மாவட்டம் பொலம்பாக்கம் அரசினர் மேல்நிலைப் பள்ளியில் படித்த 1996 ,97 ஆம் ஆண்டில் பத்தாம்வகுப்பில்பயின்ற முன்னாள் மாணவர்கள் சந்திப்பு 29 ஆண்டுகளுக்குப்பிறகுநடைபெற்றது.

அப்பொழுது பணியாற்றிய ஆசிரியர்களுக்கு மரியாதை செய்து கௌரவிக்கப்பட்டதது

பள்ளி மாணவர்களின் நலன்கருதிசுமார்மூன்று லட்சம் செலவில் நூலகத்திற்கு டைல்ஸ் மற்றும் கட்டிடம் சீரமைத்தல் வண்ணம் அடித்தல் பள்ளி அலுவலகத்திற்கு வயரிங் பிரிண்டர் மற்றும் 100 மரக்கன்றுகள் நடப்பட்டது.

அதனைத் தொடர்ந்து தங்களுடன் பயின்றபள்ளியில் முதல் மதிப்பெண் பெற்ற மாணவி திருமதி ராஜகுமாரி அவர்களுக்கு மாணவர்கள் சார்பாக சாதனையாளர் விருது வழங்கப்பட்டது நிகழ்வில் முன்னாள் மாணவர்கள் தங்கள் குடும்பத்துடன் கலந்து கொண்டு தங்களுடைய பழைய கால நினைவுகளை பகிர்ந்து கொண்டு தங்களுடைய மகிழ்ச்சியை வெளிப்படுத்தினர்.

## ஸ்ரீ மாரிபுத்தூர் செல்லியம்மன் ஆலயத்தில் தளபதி விஜய் நடித்துள்ள ஜனநாயகன் திரைப்படம் பல தடைகளை கடந்து திரையில் வெள்ளி விழா காண சிறப்பு பூஜை



செங்கல்பட்டு மாவட்டம் துராந்தகம் சட்டமன்ற தொகுதி மதுராந்தகம் தெற்கு ஒன்றியம் ஒன்றிய பொறுப்பாளர் எம் கார்த்திக்ராஜா ஏற்பட்டில் ஸ்ரீ மாரிபுத்தூர் பிடாரி செல்லியம்மன் ஆலயத்தில் தமிழக வெற்றி கழகம் சார்பாக விஜய் நடித்துள்ள ஜனநாயகன் திரைப்படம் பல தடைகளை தாண்டி திரையில் வெள்ளி விழா கான சிறப்பு அபிஷேகம் மற்றும் அன்னதானம் நடைபெற்றது .

இவ்விழாவில்சிறப்பு அழைப்பாளராக மாவட்ட கழக செயலாளர் எம்.எஸ்.பாலாஜி தலைமையில் நடைபெற்றது .

இந்நிகழ்வில் மாவட்ட பொருளாளர் ஜில்லா சபரி, நகர தலைவர் இ .பெருமாள், மாவட்ட நிர்வாகி சுமதிசாமிக்கன்னு, மகளிரணி பொறுப்பாளர் ஷிபா,மற்றும் முருகம்பாக்கம் எம்.மகி வழக்கறிஞர் ராஜேஷ் உட்பட 500 மேற்பட்ட தமிழகவெற்றி கழகநிர்வாகிகள் பலர் கலந்து கொண்டு விழாவினை சிறப்பித்தனர்.

## கோவை மாவட்டத்தில் லோக் ஜனசக்தி பார்ட்டி மற்றும் ஜனசக்தி மஸ்தூர் சபா அமைப்பின் சார்பாக, கோவை கணபதி பகுதியில் உள்ள தனியார் மருத்துவமனை விதிமுறைகளை மீறி கட்டப்பட்டுள்ளதாக கலெக்டரிடம் மனு







லோக் ஜன சக்தி கட்சி மற்றும் ஜனசக்தி மஸ்தூர் சபா அமைப்பினர் இணைந்து கோவை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் ஆட்சியரை சந்தித்து புகார் மனு ஒன்றை வழங்கினர். மேலும் இது குறித்து மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தின் முன்பாக, லோக் ஜனசக்தி கட்சியின், தேசிய செயலாளர் பாலாஜி செய்தியாளர்களிடம் கூறியதாவது.. கோவை மாநகராட்சிக்கு உட்பட்ட, சரவணம்பட்டி சாலையில், கோவை இஎன்டி என்ற பெயரில் இயங்கி வரும் தனியார் மருத்துவமனை வளாகத்தில், காது, மூக்கு, தொண்டை ஆகியவை, அறுவை சிகிச்சை செய்யும் மையமும் அமைக்கப்பட்டுள்ளது. கோவை சரவணம்பட்டியை சேர்ந்த டாக்டர் சஜிப் ரங்கசாமி இந்த மருத்துவமனையை நடத்தி வருகிறார். இந்த மருத்துவமனை முறையான எந்தவித அனுமதியையும்,கோவை மாவட்ட நகர் ஊரமைப்பு துறை மற்றும் கோவை மாநகராட்சி இடம் இருந்து பெறவில்லை எனவும், தமிழ்நாடு மாசு கட்டுப்பாட்டு வாரியத்தின் அனுமதியும், கடந்த 2011 ஆம் ஆண்டு வரை மட்டுமே பெறப்பட்டுள்ளது எனவும்,இந்த மருத்துவமனை மருத்துவம், சாராத பிற பயன்பாட்டுக்கு உள் வாடகைக்கு விடப்பட்டு உள்ளதாகவும், மருத்துவமனையின் வாகன நிறுத்துமிடம் வேறு பயன்பாடுகளுக்கு பயன்படுத்தப்பட்டு வருகின்றது எனவும், இதன் காரணமாக இந்த சாலையில் தினமும், போக்குவரத்து நெரிசல், மற்றும் விபத்துக்கள் ஏற்பட்டு உயிரிழப்புகளும் ஏற்பட்டு வருகின்றது. எனவே மாவட்ட ஆட்சியர் அவர்கள் இந்த விஷயத்தில் தலையிட்டு உடனடியாக இந்த கோவை இஎன்டி மருத்துவமனை மீது உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மனு அளித்துள்ளதாக தெரிவித்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

## 7 தமிழக மீனவர்கள் சிறைபிடிப்பு: செல்வப்பெருந்தகை கண்டனம்



தொடர்ச்சியாக இலங்கை கடற்படை இத்தகைய கொடுமையான செயலை செய்து வருகிறது. மத்திய பா.ஜ.க. அரசிடம் இலங்கை கடற்படையின் செயலை தடுத்து நிறுத்துமாறு பலமுறைகண்டித்து கூறியும் அதை கண்டுகொள்ளாமல் இருப்பது மிகவும் வேதனையளிக்கிறது. இலங்கை கடற்படையின் கைது நடவடிக்கையால் மீனவ கிராமங்களிடைய பெரும் பதற்றத்தை ஏற்படுத்தியிருக்கிறது. மத்திய அரசு உறுதியான நடவடிக்கை எடுத்து, இலங்கை கடற்படையின் அத்துமீறல்களை உடனடியாக தடுத்து நிறுத்தவேண்டும்.மீன்பிடிப்பு முறையில் உள்ள கருத்து வேறுபாடுகளை பேசி தீர்த்தால் இந்த பிரச்சினைக்கு தீர்வு காண முடியும். இந்தியா மற்றும் இலங்கை நாடுகளுக்கிடையில் நீண்ட காலமாக இருக்கிற வரலாற்று ரீதியிலான உறவின் அடிப்படையிலும், இரு அண்டை நாடுகளிடையே நிலவ வேண்டிய நல்லிணக்கத்தை கருத்தில் கொண்டும் இந்த பிரச்சினையை அணுக வேண்டும்.

## உளுந்தூர்பேட்டை ஒழுங்குமுறை விற்பனை கூடத்திற்கு விவசாயிகள் கொண்டு வந்த நெல் உளுந்து உள்ளிட்ட தானியங்களை கொள்முதல் செய்ய மறுப்பு



கள்ளக்குறிச்சி மாவட்டம் உளுந்தூர்பேட்டை மற்றும் அதனை சுற்றியுள்ள பல்வேறு கிராமங்களில் உளுந்து, நெல் உள்ளிட்ட தானியங்கள் அறுவடை பணிகள் தீவிரமாக நடைபெற்று வருகிறது இந்த நிலையில் விவசாயிகள் அறுவடை செய்த தானியங்களை உளுந்தூர்பேட்டை ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில் கொள்முதல் செய்வதற்காக இன்று காலை கொண்டு வந்தனர் காலை 8 மணிக்கு மேல் விவசாயிகள் கொண்டு வந்த தானியங்களை இன்று கொள்முதல் செய்ய முடியாது என கூறி ஒழுங்குமுறை விற்பனை கூட அதிகாரிகள் மறுப்பு தெரிவித்தனர் இதனால் ஆத்திரமடைந்த 50-க்கும் மேற்பட்ட விவசாயிகள் ஒழுங்குமுறைவிற்பனை கூட அதிகாரி துரைமுருகன் என்பவரை முற்றுகையிட்டு கடும் வாக்குவாதத்தில் ஈடுபட்டனர் இது பற்றி தகவல் அறிந்தஉளுந்தூர்பேட்டைபோலீசார்அங்குவிரைந்து சென்று விவசாயிகளிடம் பேச்சுவார்த்தை நடத்தினர் அப்பொழுது விவசாயிகள் கொண்டு வந்திருந்த தானியங்களை இன்றைய தினம் எடை போட்டு கொள்முதல்செய்யப்படும்எனதெரிவித்ததன் பேரில் விவசாயிகள் அங்கிருந்து கலைந்து சென்றனர் ஒழுங்குமுறை விற்பனை கூட அதிகாரியை விவசாயிகள் முற்றுகையிட்ட சம்பவம் பெரும் பரபரப்பு நிலவியது.

## உளுந்தூர்பேட்டை அருகே உள்ள வடமாம்பாக்கம் கிராமத்தில் மாற்றுத்திறனாளி பெண்ணை பாலியல் வன்கொடுமை செய்த வழக்கில் முதியவருக்கு 10 ஆண்டு சிறை தண்டனை



கள்ளக்குறிச்சி மாவட்டம் உளுந்தூர்பேட்டை அருகே உள்ள வட மாம்பாக்கம் கிராமத்தில் கடந்த 2019 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 20ஆம் தேதி வீட்டில் தனியாக இருந்த 27 வயதான மாற்றுத்திறனாளி பெண் ஒருவரை பூவனூர் கிராமத்தைச் சேர்ந்த 33 வயதான கோவிந்தராஜ் என்ற விவசாயி பாலியல் வன்கொடுமை செய்தார் இது குறித்த புகாரின் பேரில் உளுந்தூர்பேட்டை அனைத்து மகளிர் காவல் நிலைய போலீசார் வழக்கு பதிவு செய்தனர் இந்த வழக்கு தொடர்பான விசாரணை விழுப்புரம் மாவட்ட மகிளா நீதிமன்றத்தில்நடந்துவந்ததுவழக்குவிசாரணையின் முடிவில் கடந்த 2023 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 7-ம் தேதி மாற்றுத்திறனாளி பெண்ணை பாலியல் வன்கொடுமை செய்த கோவிந்தராஜ் என்பவருக்கு பத்து ஆண்டு சிறை தண்டனையும் 14 ஆயிரம் ரூபாய் அபராதம் விதித்து தீர்ப்பளித்தது இந்த தீர்ப்பை எதிர்த்து கோவிந்தராஜ் சென்னை உயர்நீதிமன்றத்தில் மேல்முறையீட்டு மனு தாக்கல் செய்தார் மனுவை விசாரித்த சென்னை உயர்நீதிமன்றம் கடந்த 2025 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 5ஆம் தேதி கோவிந்தராஜ் தாக்கல் செய்த மேல்முறையீட்டு மனுவை தள்ளுபடி செய்து உத்தரவிட்டதோடு கோவிந்தராஜியை கைது செய்து சிறையில் அடைக்க போலீசாருக்கு உத்தரவிட்டது இதை எடுத்து தலை மறைவாக இருந்த கோவிந்தராஜை இன்று தனிப்படை போலீசார் கைது செய்துகடலூர்மத்தியசிறையில்அடைக்கஅழைத்துச் சென்றனர்.

## பியூஷ் கோயலுடன் ஓ.பன்னீர்செல்வம் மகன் திடீர் சந்திப்பு



தமிழக சட்டசபை தேர்தலில், பிரதான எதிர்க்கட்சியான அ.தி.மு.க.வுடன் மத்தியில் ஆளும்பா.ஜ.க.கூட்டணி அமைத்துள்ளது. மேலும், இந்தக் கூட்டணியில் பா.ம.க. (அன்புமணி அணி),த.மா.கா.,புதிய நீதிக்கட்சி,இந்திய ஜனநாயக கட்சி ஆகியவை இடம்பெற்றுள்ளன. தற்போது, டி.டி.வி.தினகரன் தலைமையிலான அ.ம.மு.க.வும் கூட்டணியில் இணைந்திருக்கிறது.

இந்த நிலையில், சென்னையை அடுத்த மதுராந்தகத்தில்நாளைமறுநாள்(வெள்ளிக்கிழமை) நடைபெறும் தேசிய ஜனநாயக கூட்டணி பொதுக்கூட்டத்தில்பிரதமர்நரேந்திரமோடிபங்கேற்க இருக்கிறார். அதற்கு முன்னதாக, கூட்டணியில் இடம்பெறும்கட்சிகளைஇறுதிசெய்வதற்காகமத்திய மந்திரியும், தமிழக தேர்தல் பொறுப்பாளருமான பியூஸ் கோயல் நேற்றே சென்னை வந்துவிட்டார். நுங்கம்பாக்கத்தில் உள்ள நட்சத்திர ஓட்டலில் தங்கியுள்ள அவரை டி.டி.வி.தினகரன் சந்தித்து கூட்டணியில் இணைந்தார். இந்த நிலையில், ஓ. பன்னீர்செல்வத்தின் மகனும், தேனி தொகுதி முன்னாள் எம்.பி.யுமான பி.ரவீந்திரநாத்தும் பியூஸ் கோயலை திடீரென சந்தித்து பேசியது தமிழக அரசியலில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

சட்டசபை தேர்தலில் பா.ஜ.க.விடம் இருந்து கூட்டணி அழைப்பு வரும் என்று ஓ.பன்னீர்செல்வம் நம்பிக்கொண்டிருந்தார். ஆனால், பிரதமர் நரேந்திரமோடி தமிழகம் வரும் நிலையில் இன்னும் அவருக்கு அழைப்பு விடுக்கப்படவில்லை. அதற்கு, அ.தி.மு.க. பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி தடையாக இருப்பதாக கூறப்படுகிறது.



மதுரை மாவட்ட ஆட்சித் தலைவர் கே.ஜே.பிரவீன் குமார் (21.01.2026) மதுரை மாவட்டம், உசிலம்பட்டி வட்டத்திற்கு உட்பட்ட பகுதியில் உள்ள வத்தலக்குண்டு பெரியார் நெடுஞ்சாலையில் மேற்கொள்ளப்பட்டு வரும் அகலப்படுத்தும் பணி மற்றும் மேம்படுத்தும் பணிகளை ஆய்வு செய்து பார்வையிட்டார்



தூத்துக்குடி திரேஸ்புரம் பகுதி 8வது வார்டுக்கு உட்பட்ட சிலுவையார் கோவில் தெருவில் சிலுவையார் நற்பணி மன்றத்தின் சார்பில் நடைபெற்ற நிகழ்ச்சியில் சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை அமைச்சரும், தூத்துக்குடி வடக்கு மாவட்ட திமுக செயலாளருமான கீதாஜீவன் கலந்துகொண்டு பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினார். நிகழ்வில் மாநகர திமுக செயலாளர் ஆனந்த சேகரன், பகுதி செயலாளர் நிர்மல்ராஜ், மாமன்ற உறுப்பினர் பவானி, வட்டச் செயலாளர் ரவிச்சந்திரன், வட்ட பிரதிநிதி மார்ஷல், மாவட்ட மீனவர் அணி துணை அமைப்பாளர் ராபர்ட், எட்டாவது வட்ட இளைஞர் அணி அமைப்பாளர் ரெடிஸ்டன், விளையாட்டு மேம்பாட்டு அணி நிர்வாகி ரக்சன், கலை இலக்கிய பகுத்தறிவு பேரவை நிர்வாகி சாலமன், சிறுபான்மையினர் அணி நிர்வாகி நிக்கோலஸ், அண்ணா சங்குளி சங்க தலைவர் இசக்கிமுத்து, சிந்தாதுரை மாதா மீனவர் சங்க ஆல்ட்ரின், மாவட்ட மீனவர் சங்க பொறுப்பாளர் ராஜா போஸ் ரீகன் மற்றும் சிலுவையார் நற்பணி மன்றத்தைச் சேர்ந்த நிர்வாகிகள் இளையான்ஸ், சாம்சன், ராஜன், சுதர்சன், அபிசன், மெல்பர், பிதலீஸ், சேவியர், சஞ்சய், ரெனால்ட் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

# மதுரை விமான நிலையம் அருகே உள்ள சின்ன உடைப்பு பகுதியில் தலித் விடுதலை இயக்கத்தினர் சார்பில் சாலை மறியல்




மதுரை மாவட்டம் திருப்பரங்குன்றம் தொகுதிக்குட்பட்ட மதுரை விமான நிலையம் அருகே பாப்பான்ஓடை, ராமன் குளம், தின்னா நேரி கிராமங்களில் வசிக்கும் பொது மக்களின் வாழ்வாதாரங்களை பாதுகாத்திட சின்ன உடைப்பு மதுரை விமான நிலையம் தடுப்பு சுவரிலிருந்து மங்கம்மா சாலை வரை சர்வீஸ் சாலை அமைத்து தராத அரசை கண்டித்து இன்று தலித் விடுதலை இயக்கம்சார்பில்விமான நிலையம் அருகே சின்ன உடப்பு மதுரை தூத்துக்குடி தேசிய நெடுஞ்சாலையில் சாலை மறியல் போராட்டம் நடத்தப் போவதாக அந்த இயக்கம் அறிவித்திருந்தது. அனுமதி இன்றிபோராட்டம்நடத்த திட்டமிட்டு இருப்பதாகவும் விமான நிலைய விரிவாக்கத்திற்காக சின்ன உடைப்பு பகுதி மக்கள் போராட்டத்தில் ஈடுபட்டு வந்த நிலையில் பதட்டமான இடம் என்பதால் அவனியாபுரம் உதவி ஆணையர் தலைமையில் 100க்கும் மேற்பட்ட போலீசார் கைது செய்ய நான்கு காவல் வாகனங்கள் கொண்டுவரப்பட்டு போலீசார் குவிக்கப்பட்டனர். இந்த நிலையில் மதுரை தெற்கு தாசில்தார் விமான நிலையம் அலுவலர்கள் காவலர்கள் நடத்திய பேச்சுவார்த்தைக்கு பின் அனுமதி இன்றி சாலை மறியல் போராட்டத்தில் விடுபட முயன்ற போராட்டக்காரர்கள் கலைந்து சென்றனர் இதனால் அப்பகுதி பரபரப்பாக காணப்பட்டது.

# ஈரோடு மாவட்டம் பெருந்துறையில் விசிக புதிய நிர்வாகிகள் அறிமுகக் கூட்டம்: மாவட்டச் செயலாளர் வி.விஜயபாலன் அறிக்கை



ஈரோடு: விடுதலைச் சிறுத்தைகள் கட்சியில் கடந்த 1998-ஆம் ஆண்டு முதல்தன்னைஇணைத்துக் கொண்டு, ஈரோட்டின் முதல் போராளி நா.செந்தமிழன் அவர்களின் வழிகாட்டுதலில் கிளைச் செயலாளர், ஒன்றியச் செயலாளர், மாவட்டப் பொருளாளர் எனப் பல்வேறு பொறுப்புகளைத் திறம்பட வகித்தவர் வி. விஜயபாலன்,

அம்பேத்கர் மற்றும் தொல்.திருமாவளவன் ஆகியோரின் கொள்கைகளை ஏற்று, கட்சிப் பணிகளிலும் போராட்டங்களிலும் அர்ப்பணிப்புடன் செயல்பட்ட அவருக்கு, தற்போது பெருந்துறை சட்டமன்றத் தொகுதியின் மாவட்டச் செயலாளர் பொறுப்பினை வழங்கித் தலைமை அங்கீகரித்துள்ளது.

இதனைத் தொடர்ந்து, புதிய பொறுப்பேற்ற பிறகு நடைபெறும் முதல் நிகழ்வாக, வருகின்ற 27.01.2026 அன்று மாலை 3.00 மணி அளவில், பெருந்துறை பழைய பேருந்து நிலையம் அருகில் உள்ள சத்தி திருமண மண்டபத்தில், புதிய நிர்வாகிகள் அறிமுகக் கூட்டமும் செயற்குழு கூட்டமும் பெருந்துறை சட்டமன்ற தொகுதி மாவட்டச் செயலாளர் வி.விஜயபாலன் தலைமையில் நடைபெற உள்ளது.

இந்நிகழ்வில் கட்சியின் துணைப் பொதுச்செயலாளர் வெ.கனியமுதன், வழக்கறிஞர் பிரிவு மாநிலச் செயலாளர் பார்வேந்தன், மற்றும் கருத்தியல் பரப்புக்குழு மாநிலச் செயலாளர் சுசி.கலையரசன் ஆகியோர் கலந்துகொண்டு சிறப்பிக்கின்றனர்.

ஈரோடு மாநகர மாவட்டச் செயலாளர் எஸ்.எம்.சாதிக்,மொடக்குறிச்சி தொகுதிச் செயலாளர் வி.கமலநாதன், பவானி மாவட்டச் செயலாளர் சுரேஷ், மேற்கு மாவட்டச் செயலாளர் தனவிஜயன், அந்தியூர் மாவட்டச் செயலாளர் ஈஸ்வரன்,கோபி மாவட்டச் செயலாளர் கஸ்தூரி தேவி, பவானிசாகர் மாவட்டச் செயலாளர் பொன் தம்பி ராஜன், திருப்பூர் மாநகர மாவட்டச் செயலாளர் ஏ.பி.ஆர். மூர்த்தி, மற்றும் அவிநாசி தொகுதிச் செயலாளர் வழக்கறிஞர் சத்தியமூர்த்தி ஆகியோர் பங்கேற்கின்றனர்.

இக்கூட்டத்தில் பெருந்துறை சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட மண்டலச் செயலாளர், மாநிலப் பொறுப்பாளர்கள், பொருளாளர், செய்தி தொடர்பாளர் மற்றும் ஊத்துக்குளி, சென்னிமலை, பெருந்துறை ஆகிய ஒன்றியங்களைச் சேர்ந்த ஒன்றிய, பேரூர், நகரப் பொறுப்பாளர்கள் அனைவரும் தவறாமல் கலந்துகொள்ளுமாறு மாவட்டச் செயலாளர் வி.விஜயபாலன் தனது அறிக்கையில் வெளியிட்டுள்ளார்.



ஈரோடு மாவட்டத்தில் உள்ள சென்னிமலை முருகன் கோவிலில் நேற்று செவ்வாய்க்கிழமையை முன்னிட்டு, இரவு அலங்கரிக்கப்பட்ட வேங்கை தேரில் முருகப்பெருமான்திருவீதி உலா நடைபெற்றது. முருகன் அடிமை சுப்பு சுவாமிகள் பக்திப் பாடல்களைப் பாடி இறைவனை வழிபட்டார். திரளான பக்தர்கள் "ஆரோகரா" முழக்கமிட்டுத்தேரினைஇழுத்துச்சென்றுதரிசனம்செய்தனர்.இந்தச்சிறப்புவழிபாட்டில் பக்தர்கள் கலந்துகொண்டு முருகனின் அருளைப் பெற்றனர்.



ஈரோடு மாவட்டம் பவானி அருகே காவல்துறை சார்பில் விழிப்புணர்வு நிகழ்ச்சி நடைபெற்றது. இந்நிகழ்வில் போக்குவரத்து காவல் ஆய்வாளர் கஸ்தூரி தலைமையில் கார்ஓட்டுநர்கள்மற்றும்உரிமையாளர்களுக்குச்சாலைபாதுகாப்புவிழிப்புணர்வுசெய்தார். சாலை பாதுகாப்பு மாத விழாவை முன்னிட்டு, விபத்துகளைத் தவிர்க்க ஓட்டுநர்கள் அனைவரும் சாலை விதிகளை முறையாகக் கடைபிடித்து வாகனங்களை இயக்க வேண்டும் எனப் போலீசார் அறிவுறுத்தினர்.

# ஜெயலலிதாவுக்கு எதிரான வழக்கு வரி வசூலை நிறுத்தி வைக்க ஐகோர்ட்டு உத்தரவு

மறைந்த முன்னாள் முதல்-அமைச்சர்ஜெயலலிதாவுக்கு எதிரான வருமான வரி வழக்கில், வரி பாக்கியை செலுத்த வேண்டும் என்று கூறி ஜெயலலிதாவின் சட்டப்பூர்வ வாரிசாக அறிவிக்கப்பட்டுள்ள தீபாவுக்கு வருமான வரித்துறை நோட்டீஸ் அனுப்பி இருந்தது. தீபா தரப்பில் ஐகோர்ட்டில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டது. மேலும், ஜெயலலிதாவின் மற்றொருவாரிசாகஅறிவிக்கப்பட்டிருந்த தீபக்கும் இந்த வழக்கில் சேர்க்கப்பட்டிருந்தார். கடந்த முறை இந்த வழக்கு விசாரணைக்கு வந்தபோது தீபா தரப்பில் ஆஜரான வழக்கறிஞர், "வருமான வரி பாக்கியை பொறுத்தவரை முதலில் 36 கோடி ரூபாய் என்றும், பிறகு 13 கோடி ரூபாய் என்றும் வருமான வரித்துறை தரப்பில் நோட்டீஸ் அனுப்பப்பட்டுள்ளது என்றும், சரியான தொகையை தெரிவித்தால் அந்த தொகையை செலுத்த தயாராக இருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது. வருமான வரி பாக்கி குறித்து வருமான வரித்துறை தரப்பில் இதுவரை பதில் மனு தாக்கல் செய்யப்படவில்லை என தீபா தரப்பில் தெரிவிக்கப்பட்டது. இதையடுத்து வருமான வரி பாக்கி குறித்து 2 வாரங்களில்பதில்மனு தாக்கல்செய்யவேண்டும் எனவருமானவரித்துறைக்கு உத்தரவிட்ட நீதிபதி,அதுவரை வரி பாக்கி வசூல் நடவடிக்கைகளை நிறுத்தி வைக்க வேண்டும் என உத்தரவிட்டார்.



பிரபல சி.எஸ்.பல்நோக்கு மருத்துவமனை அதிபர் டாக்டர்.ஸ்டாலின் ராஜா,வழக்கறிஞர் லெனின் பாரதி ஆகியோரின் தந்தையார் வழக்கறிஞர்.எஸ். செல்லத்துரை நினைவாக அவரின் புகழ் என்றும் நிலைத்து நிற்கும் விதமாக மதுரைதொண்டி சாலையில் முப்பையூர் ராயர்பட்டிணம் விலக்கில் நினைவு வளைவு திறப்பு விழா" நடைபெற்றது.முன்னாள் காரைக்குடி தொகுதி சட்டமன்ற உறுப்பினர் கே.ஆர்.ராமசாமி பி.ஆர். செந்தில்நாதன் எம்எல்ஏ, வழக்கறிஞர்செல்லதுரைமனைவிசரோஜாஅம்மையார்,ஆகியோர்திறந்துவைத்தனர்.மருத்துவர்.ஸ்டாலின்ராஜாவரவேற்றார்.ஆசிரியர்ராமகிருஷ்ணன் நிகழ்ச்சியை தொகுத்து வழங்கினார். இந்நிகழ்ச்சியில் , முன்னாள் காரைக்குடி சட்டமன்ற உறுப்பினர் கற்பகம் இளங்கோ, மற்றும் ஊர் பொதுமக்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்



25.01.2026 அன்று தேசிய வாக்காளர் தின விழாவினை முன்னிட்டு வாக்காளர்களுக்கு வாக்குப்பதிவு குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் ஈரோடு மாவட்ட தேர்தல் அலுவலர்/ மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி மாவட்ட ஆட்சியரக வளாகத்தில் நேற்று (21.01.2026) வாக்குப்பதிவு செயல் விளக்க மையத்தில் வைக்கப்பட்ட மின்னணு வாக்குப்பதிவு இயந்திரத்தில் மாதிரி வாக்குப்பதிவு செய்து அதன் செயல்பாடுகளை பார்வையிட்டார்.



ஈரோடு மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி நேற்று (20.1.2026) ஈரோடு மாவட்டம், தாளவாடி ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளியைச் சேர்ந்த மாணவ, மாணவியர்களுடன் கலந்துரையாடி கற்றல் திறன் குறித்து ஆய்வு மேற்கொண்டார்.



ஈரோடு மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி (20.1.2026) அன்று ஈரோடு மாவட்டம், தாளவாடி அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் மாணவ மாணவிர்களுடன் கலந்துரையாடி அதிக மதிப்பெண் பெற்ற மாணவ மாணவியர்களுக்கு சால்வை அணிவித்து பாராட்டி வாழ்த்துக்களைத் தெரிவித்தார்.

# தூத்துக்குடி மாநகராட்சி கிழக்கு மண்டல அலுவலகத்தில் மேயர் ஜெகன் பெரியசாமி தலைமையில் குறைதீர்க்கும் முகாம் நடைபெற்றது



தூத்துக்குடி மாநகராட்சி சார்பில் புதன்கிழமை தோறும் ஒவ்வொரு மண்டலத்திலும் பொதுமக்கள் குறைதீர்க்கும் முகாம் நடைபெற்று வருகிறது அடிப்படையில் பழைய நகராட்சி கிழக்கு மண்டல அலுவலகத்தில் இன்று பொதுமக்கள் குறைதீர்க்கும் முகாம் மேயர் ஜெகன் பெரியசாமி தலைமையில் நடைபெற்றது.

கூட்டத்தில் மேயர் ஜெகன் பெரியசாமி பேசுகையில்: தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் உத்தரவிற்கிணங்க இந்த குறைதீர்க்கும் முகாம் நடந்து வருகிறது. இதற்கு பொதுமக்கள் மத்தியிலும் நல்ல வரவேற்பு இருக்கிறது.கிழக்கு மண்டலத்தில் இதுவரை 19 முகாம்களில் 848 மனுக்கள் பெறப்பட்டு 832 மனுக்களுக்கு தீர்வு காணப்பட்டுள்ளது 16 மனுக்கள் ஆய்வில் உள்ளது. தூத்துக்குடி மாநகராட்சி பகுதியில் வாகனங்கள் பெருகி உள்ளதால் போக்குவரத்து அதிகரித்துள்ளது இதனை கருத்தில் கொண்டு முதலமைச்சர் ஸ்டாலின் உத்தரவுக்கிணங்க இதுவரை 4000 புதிய சாலைகள் போடப்பட்டுள்ளது. குறுகிய தெருக்களிலும் பேவர் பிளாக் மற்றும் தார் சாலைகள் முழுமையாக அமைக்கப்பட்டுள்ளன. பொதுமக்கள் வாகனங்களை மாநகராட்சி பகுதியில் உள்ள வி.இ ரோடு வி.வி.டி ரோடு உள்பட அதற்காக ஒதுக்கப்பட்ட இடங்களில் நிறுத்த வேண்டும். இது பெருமளவு போக்குவரத்து நெரிசலை குறைக்கும். கிழக்கு மண்டலத்தில் 40 வருடங்களுக்கு முன்னர் கட்டப்பட்ட வடிகால்கள் முழுமையாக சீரமைக்கப்பட்டு வருகிறது.முதல் கட்டமாக எஸ்.எஸ்.பிள்ளை மார்க்கெட் பகுதியில் உள்ள வடிகால்கள் சீரமைக்கப்பட்டு உள்ளது.

கடந்த அதிமுக ஆட்சியில் பொழுதுபோக்கு அம்சங்கள் இல்லாத நிலை இருந்தது. திமுக அரசு வந்த பிறகு அதை மாற்றி புதிய முத்துநகர் கடற்கரை பூங்காக்கள், மகளிர் பூங்காக்கள், விளையாட்டுத் திடல்கள் என 53 எதிர்கால தலைமுறையினர் நலன் கருதி அமைத்துள்ளோம். கடற்கரை சாலையில் உள்ள படகு குழாம் மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டுள்ளது. மக்கள் மகிழ்ச்சியுடன் பயன்படுத்தி வருகின்றனர். பெல் ஹோட்டலிருந்து அந்த கடற்கரை சாலை 8 கிலோமீட்டர் குறிப்பாக மக்கள் நடை பயிற்சிக்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டும் என்ற எண்ணத்தில் தூத்துக்குடி மாவட்டத்தின் முக்கிய சாலைகளில் நடைபயிற்சி தளம் அமைக்கப்பட்டு சுற்றுச்சூழலையும் பாதுகாத்து வருகிறோம். மக்கள் சாலையில் குப்பைகளை போடுவதை தவிர்க்கவேண்டும்குறிப்பாக பக்கிள் ஓடை ஓரங்களில் குப்பைகள் கொட்டுவதை தவிர்த்து தங்கள் வீடுகளுக்கு வரும் தூய்மை பணியாளிடம் குப்பைகளை சேகரித்துக் கொடுக்க வேண்டும் விடுபட்ட சாலைகள் போடும் பணியும் விரைவில் தொடங்கும் என்று மேயர் ஜெகன் பெரியசாமி தெரிவித்தார். பின்னர் முகாமில் பெறப்பட்ட மனுக்களின் மீது தீர்வுகள் காணப்பட்டவர்களுக்கு அதற்கான ஆணைகளை மேயர் வழங்கினார்.

நிகழ்ச்சியில் மாநகராட்சி ஆணையர் பிரியங்கா, துணை மேயர் ஜெனிட்டா, பகுதி செயலாளரும் மாமன்ற உறுப்பினருமான சுரேஷ்குமார், மாமன்ற உறுப்பினர்கள் ரெக்ஸ்லின், எடின்டா, பேபி ஏஞ்சலின், மகேஷ்வரி, போல்பேட்டை பகுதி பிரதிநிதி பிரபாகர், மேயரின் நேர்முக உதவியாளர் ரமேஷ், ஆணையரின் நேர்முக உதவியாளர் துரைமணி, உள்பட பொதுமக்கள் அரசுத்துறை அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.



ஈரோடு மாவட்டம் பவானி போக்குவரத்து காவல்துறை சார்பில் சாலை பாதுகாப்பு மாத விழாவை முன்னிட்டு விழிப்புணர்வு பேரணி நடைபெற்றது. இதில் நகரவை நடுநிலைப் பள்ளி மாணவர்கள் 100க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டு தலைக்கவசம் அணிவதன் அவசியம், சாலை விதிகளைப் பின்பற்றுதல் மற்றும் விபத்தில்லா பயணத்தை உறுதி செய்தல் குறித்த பதாகைகளை ஏந்தியபடி முழக்கமிட்டவாறு பேரணி வந்தனர்.



ஈரோடு மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி மாவட்ட ஆட்சியரக கூட்டரங்கில் நேற்று (21.01.2026) பள்ளிக்கல்வித்துறை, பொது நூலக இயக்ககம் சார்பில் நடத்தப்பட்ட இளைஞர் இலக்கியத் திருவிழா 2026ல் பங்கேற்று வெற்றி பெற்ற மாணவ, மாணவியர்கள் மற்றும் இப்போட்டிகளில் நடுவராக பணியாற்றிய கல்லூரி பேராசிரியர்களுக்கு பாராட்டுச்சான்றிதழ் வழங்கி வாழ்த்துக்களைத் தெரிவித்தார். உடன் முதன்மை கல்வி அலுவலர் முனைவர்.இ.மான்விழி, தமிழ்வளர்ச்சித் துணை இயக்குநர் வே.ஜோதி, மாவட்ட நூலக அலுவலர் (பொ)சு.சாமிநாதன் உட்பட பலர் உள்ளனர்.



ஈரோடு மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி மாவட்ட ஆட்சியரக கூட்டரங்கில் நேற்று (21.01.2026) பள்ளிக்கல்வித்துறை, பொது நூலக இயக்ககம் சார்பில் நடத்தப்பட்ட இளைஞர் இலக்கியத் திருவிழா 2026ல் பங்கேற்று வெற்றி பெற்ற மாணவ, மாணவியர்களுக்கு பரிசுத்தொகை மற்றும் பாராட்டுச்சான்றிதழ்கள் வழங்கி வாழ்த்துக்களைத் தெரிவித்தார். உடன் முதன்மை கல்வி அலுவலர் முனைவர்.இ.மான்விழி, தமிழ்வளர்ச்சித் துணை இயக்குநர் வே.ஜோதி, மாவட்ட நூலக அலுவலர் (பொ)சு.சாமிநாதன், மாவட்ட முதல்நிலை நூலகர் இரா.கருத்திருமன் ஆகியோர் உள்ளனர்.



ஈரோடு தெற்கு காவல் நிலைய எல்லைக்குட்பட்ட பழைய கரூர் சாலையில், கடந்த 19.01.2026 அன்று இரவு வாடகைக்கு கார் ஓட்டும் அன்சர் அலி என்பவரை மர்ம நபர்கள் நால்வர் வாடகைக்கு வரவழைத்துள்ளனர். பழைய ரயில்வே குடியிருப்பு அருகே கார் வந்த போது, அங்கு மறைந்திருந்த அந்த கும்பல் அன்சர் அலியைத் தாக்கி அவரிடமிருந்த டொயோட்டா கிளான்ஸா கார், ரொக்கப் பணம் 1000 ரூபாய், வெள்ளி பிரேஸ்லெட் மற்றும் செல்போன் ஆகியவற்றைத் திட்டமிட்டு கொள்ளையடித்துச்சென்றனர்.இதுகுறித்ததகவல் மாவட்டகட்டுப்பாட்டுஅறைக்குத்தெரிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து, கொள்ளையடிக்கப்பட்ட காரின் எண் மற்றும் சந்தேக நபர்களின் அடையாளங்கள் மாவட்டம் முழுவதும் உள்ள இரவு ரோந்து போலீசாருக்கு உடனடியாக பகிரப்பட்டு தீவிர வாகன சோதனை மேற்கொள்ளப்பட்டது. அப்போது பெருந்துறை விஜயமங்கலம் டோல்கேட் வழியாக கோவைசேலம் தடம் 3ல் சந்தேகத்திற்கிடமான முறையில் கடக்க முயன்ற காரை மறித்த பெருந்துறை தேசிய நெடுஞ்சாலை ரோந்து வாகன உதவி ஆய்வாளர் சத்தியசிங் மற்றும் காவலர் செந்தில் ஆகியோர், காரில் இருந்த 4 எதிரிகளையும் துணிச்சலாகப் பிடித்து கைது செய்தனர். கொள்ளை நடந்த சில மணி நேரங்களிலேயே குற்றவாளிகளைப் பிடித்து கார் மற்றும் உடமைகளை மீட்ட இந்த துரிதமான நடவடிக்கையைப் பாராட்டி, மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அ.சுஜாதா, உதவி ஆய்வாளர் சத்தியசிங் மற்றும் காவலர் செந்தில் ஆகியோரை நேரில் அழைத்து பாராட்டுச் சான்றிதழ்கள் வழங்கி கௌரவித்தார்.

Printed by,Hiwins Printers,Published by M.APROSE, onbehalf of M.APROSE, printed at ERODE, and Published at ,1, THATTANKAADU 4TH STREET, KONGU VELAAN NAGAR, VTC PERIYASEMUR, PO: PERIA SEMUR, ERODE, TAMIL NADU - 638004 ,Editor HARI KRISHNAN M.